வருகிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுகின்றார்கள். சென்ற 5 ஆண்டுகளாகத் தேர்ச்சி பெற்றவர்களில் எத்தனை சதவிகிதம் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று கூற முடியுமானால், உண்மையாகக் குறைந்திருக்கிறதா அல்லது எடுத்தவர்களுடைய எண்ணிக்கை குறைவா என்பதை அறிந்து கொள்ள இயலும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, எனக்கு வந்த விவரப்படி, 1968-ல் 9 சதவிகிதம். அதில் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 121 பேர்கள். அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 11 பேர்கள். 1969-ல் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 100 பேர்கள். அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 8 பேர்கள். 1970-ல் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 96. தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 8 பேர்கள். 1971-ல் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 111 பேர்கள். அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 10 பேர்கள். 1972-ல் மொத்தம் செலக்ஷன் ஆனவர்கள் 144 பேர்கள். அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் 11 பேர்கள். ஆக சதவிகிதம் 1968-ல் 9, 1969-ல் 8 சதவிகிதம், 1970-ல் 8 சதம், 1971-ல் 9 சதவிகிதம், 1972-ல் 8 சதவிகிதம். இப்படித்தான் சதவிகிதங்கள் ஏறத்தாழ இருக்கின்றன. அதிக வித்தியாசம் ஏற்பட்டுவிட வில்லை.

Damages due to floods in Tiruppur, Coimbatore district

@ * 312 Q.—THIRU WILSON APPOLLOS (on behalf of THIRU L. BALARAMAN) : Will the Hon. the Chief Minister be pleased to state the number of (i) loss of lives and (ii) the value of the damages to properties caused on account of the floods in Tiruppur, Coimbatore District during September 1972 ?

கோவை மாவட்டம் திருப்பூரில் ஆற்று வெள்ளத்தினால் ஏற்பட்ட சேதம்

திரு. வில்சன் அப்பலோஸ் (திரு. எல். பலராமன் சார்பில்) : மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

கோவை மாவட்டம் திருப்பூரில் ஆற்று வெள்ளத்தினால் 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏற்பட்ட (1) உயிர் சேதம், (2) பொருள் சேதம் எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 28—9—72 இரவு திருப்பூரில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக—

(அ) 18 பேர் உயிரிழந்தனர். 400 கால்நடைகள் இறக்கப்பட்டன.

(இ) விரயமான சொத்தின் மொத்த மதிப்பு ரூ. 1,61,165 ஆகும்.

@ 31—3—1973 ஆம் தேதி வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப்போடப் பட்டது.